ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2112/44 - 2019 මාර්තු මස 01 වැනි සිකුරාදා - 2019.03.01

2112/44 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பிரதேச செயலாளர் குறிப்பு இல.: 9/3/5/7.
எனது குறிப்பு இல.: 4-3/9/2013/WS/461.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், யட்டவத்தை பிரதேச செயலாளர் பிரிவில், அஸ்கிரி பத்து பள்ளேசிய பத்து சிறு பிரிவில், வடக்கு மாத்தளை கிராம அலுவலர் பிரிவில், புஞ்சிலெவகந்த வத்தை கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட முதற்சுவட்டு வரைபடத்தின் இலக்கம் 1716 இல் காட்டப்பட்ட 0.1012 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய லெவகந்த வத்தை எனும் காணித்துண்டின் விபரம்:

1. துண்டு இல. 1

காணியின் பெயர்: லெவகந்தவத்தை; விபரம்: விஸல் மாத்தளை நீர் கருத்திட்டத்தின் நீர் தாங்கியை அமைத்தல்; உரிமை கோருவோர்: ஹபகொட்டுவே கெதர கிப்சன் ஹபுகொட்டுவே; விஸ்தீரணம்: 0.1012 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 03 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு, யட்டவத்த பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 21 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டி. ஆர். கே. ஹென்னாயகே,
பிரதேச செயலாளர்,
யட்டவத்த.

பிரதேச செயலகம்,
யட்டவத்த,
2019, பெப்புருவரி 26.

3 - 863

1A - G 29559 — 17 (2019/03) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*